அசல் வழக்கு எண். **172/2018,** வா.சா.**2,** பழனிவேல், த/பெ.நடேசன்

தேதி **19.08.2024**

<u>குறுக்கு விசாரணை</u> **:**

வாதி எனக்கு உறவினரா என்றால் தூரத்து சொந்தம். வாதி எந்த புல எண்ணிற்காக வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் புல எண் தெரியாது. இடம் மட்டும் தெரியும். வழக்கு சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்கள் நத்தம் என்றால் சரிதான். நத்தம் இடத்தினை யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்களுக்குதான் அந்த இடம் சொந்தம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டுவதற்கு சுமார் 4 ½ அடி உயரத்திற்கு அடித்தளம் அமைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 4 ½ அடித்தளத்திற்கு மேல் ஜன்னல் மட்டத்திற்கு சுவர் எழுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கட்டுமான வேலையை கட்டிடத்திற்கு தேவையான பில்லர்களும் எழுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கட்டுமான வேலைகள் எவ்வளவு காலத்திற்கு நடந்தது என்றால் சுமார் 4,5 மாதங்கள் நடந்தது.

2. மேற்படி கட்டிடம் எவ்வளவு விஸ்தீரணத்தில் கட்டப்பட்டுள்ளது என்றால் சுமார் 500 ச.அடியில் கட்டப்பட்டுள்ளது. வாதி பிரதிவாதிக்கு இடையே வழக்கு சொத்து தொடர்பான பிரச்சனை சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்தில் பேசப்பட்டது என்றால் பேசப்பட்டதாக கேள்விப்பட்டேன். வாதியின் இடத்திற்கு பின்னால் உள்ள இடத்தினை வாதி பயன்படுத்திக்கொள்வது என்றும், பிரதிவாதி வீட்டிற்கு பின்னால் உள்ள இடத்தினை பிரதிவாதி பயன்படுத்திக்கொள்வது என்றும் பேசப்பட்டதாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டிற்கு பின்னால் உள்ள இடம் தொடர்பாகதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்படி பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.